Economic Growth is Creating "Political Space" for Deeper Reforms in South Asia: World Bank Report

# The World Bank

News Release No. 2006//SAR

Media Contact: **Erik Nora**
(202) 458-4735
Toronto cell: (202) 465 1974
enora@worldbank.org
**Phil Hay**
(202) 473 1796
Toronto cell: (202) 409 2909
phay@worldbank.org

## தெற்காசியாவின் பொருளாதார வளர்ச்சி ஆழமான சீர்திருத்தங்களுக்கான 'ஒரு அரசியல் வெளியை" உருவாக்கியுள்ளது. (உலக வங்கி அறிக்கை).

(சரியான கொள்கைகள் தேர்வுகளின் மூலம் பிராந்தியங்களில் வறுமையை நிரந்தரமாக ஒழிக்கலாம்).

**சிங்கப்பூர் செப்டெம்பர் 15, 2006**

உலக வங்கியின் அறிக்கையின்படி, தெற்காசியாவின் வலுவான பொருளாதார வளர்ச்சிக்கு அரசுகள் அரசியல் கொள்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளபோதும் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தவும், அதனை தக்கவைத்துக் கொள்ளும் வாய்ப்பினை தற்போதய சமூகப் பொருளாதார பிரச்சினைகள் இல்லாமற் செய்துள்ளது.

உலகின் அதிகூடிய சனத்தொகையை கொண்ட தெற்காசிய பிராந்தியங்களின் வறுமையை ஒரு தலைமுறைக்குள் ஒழிக்க ஒரு வாய்ப்பினை ஏற்படுத்தி தருகிறது.

உலக வங்கியின் தெற்காசிய பிராந்தியங்களுக்கான உபதலைவர் திரு.பிராபுல் பட்டேல், "தெற்காசியாவின் வறுமையான மக்களுக்கு அவர்களை வறுமையிலிருந்து விடுவித்து வெளிக்கொணர இது ஒரு நல்ல வாய்ப்பாகும்" என்று கூறினார். இதன்படி தெற்காசிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சி அரசாங்கங்களின் கொள்கைளில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்த வாய்ப்பளித்துள்ளது.

இவ்வறிக்கையின் அறிக்கையின் சக எழுத்தாளரும், உலக வங்கியின் தெற்காசிய நாடுகளுக்கான பொருளியல் வல்லுனருமான **சாந்தயனன் தேவராஜன்**, "தெற்காசிய நாடுகளின் மாற்றங்களுக்கு பொது மக்களின் விழிப்புணர்ச்சியும், ஏனைய நாட்டு அனுபவங்களுமே முக்கிய காரணியாக அமைகின்றது.

சில நாடுகளின் பொருளாதார வளர்ச்சி புழக்கத்தை அதிகரிப்பதோடு மட்டுமல்லாமல், பொருளாதார சமூக பிரச்சினைகளை தீர்க்கவும் உதவுகிறது. 1996ம் ஆண்டு முதல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மாலைதீவுகள், நேபாள் மற்றும்

இலங்கையில் ஆகியன வருடத்துக்கு சராசரியான வளர்ச்சி கண்டுள்ளன. 2000ம் ஆண்டு முதல் பாகிஸ்தானும் இவ்வளர்ச்சி வீதத்தை கண்டு வருகின்றது. கடந்த 2 ஆண்டுகளாக இந்தியாவும், பாகிஸ்தானும கிட்டத்தட்ட 7% பொருளாதார வளர்ச்சியை கண்டு வருகின்றன. ஆப்கானிஸ்தானில் பல வருடங்களாக ஏற்பட்டிருந்த உள்நாட்டு கிளர்ச்சிகள் காரணமாக பொருளாதார வளர்ச்சியில் மேலதிக இருமடங்கு குறைவை ஏற்படுத்தி பாதிக்கப்படையச் செய்துள்ளது.

இவ்வறிக்கையின் இணை ஆசிரியரும், உலக வங்கியின் தெற்காசிய நாடுகளின் பொருளியல் அறிஞருமான சேகர் ஷா "இப்பிரதேசத்தின் வறுமையை ஒழிப்பதற்கு தெற்காசிய நாடுகள் 8-10% மான வளர்ச்சியை ஒரு வருடத்தில் அடைய வேண்டும். ஆனால் அதற்கு மனித வள அபிவிருத்தியும், அரசியல் நிர்வாக வழிமுறைகளும் முறையாக கடைப்பிடிக்கப்படல் வேண்டும் என்று கூறினார்.

இவ்வறிக்கையின் குறிக்கோளை அடைவது கடினமாக இருந்தாலும் பொருளாதார வளர்ச்சி துரிதமானதாக இருக்கும். இவ்வளர்ச்சி வளங்களில் மட்டுமல்லாது, அரசியலிலும் பாரிய மாற்றங்களை ஏற்படுத்த வழிவகுத்துள்ளது. ஒரு புறம் மக்கள் தமது தேவைகளை உடனடியாக பூர்த்தி செய்யுமாறு அரசுக்கு அழுத்தம் கொடுக்கின்றனர். மறுபுறம் அரசியல் ரீதியான தேவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க உதவுகின்றது.

இவ்வறிக்கையின்படி அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்தல், தொழில் நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள் ஆகியவற்றினது நிர்வாக சட்டத்திட்டங்களை இலகுப்படுத்துவதற்கும் இவ்வளர்ச்சி உதவுகின்றது. உதாரணமாக பாகிஸ்தானில் அரச வங்கிகளை தனியார்மயப்படுத்துவதினால் உண்டான நன்மைகளையும் தெளிவாக புலப்படுத்துகின்றது.

தெற்காசிய நாடுகளின் சட்டத்திருத்தங்களின் மூலம் அரசியல் ரீதியாக திறந்த பொது நடைமுறை நிர்வாக செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும். அண்மையில் இந்தியா இத்திட்டத்தின் மூலம் பகிரங்கமாக அரச நிர்வாகம், கணக்கீடுகள் தொடர்பாக கேள்விகளை கேட்பதோடு, அரச நிர்வாக குறைபாடுகள் தொடர்பான கருத்துக்களை தனிநபர்கள் தெரிவிக்க கூடிய சுதந்திரத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் இவ்வளர்ச்சியால் பெறப்பட்ட மேலதிக நிதியை தெற்காசிய நாடுகள் சுகாதார நலன்புரி சேவைகளுக்கும், கல்விக்கும் பயன்படுத்துகின்றன. நாட்டு மக்கள் அழுத்தம் கொடுக்கும் விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஒப்பந்தகாரர்களிடம் ஒப்படைத்து தேவையை நிறைவேற்றிக்கொடுக்கப்படுகின்றது. ஆனாலும் பிரஜைகள் சமூக நிர்வாகத்துடன் கூடிய பாடசாலைகள், ரசீதுகள், மட்டுப்படுத்தப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் என்பவைகள் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையும்.

பங்களாதேஷும் அண்மையில் பாகிஸ்தானும் சுகாதாரத்துறையை அரச சார்பற்ற அமைப்புகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் வழங்கி மக்களுக்கு சேவையைப் பெற்றுக்கொடுத்தன. பெங்களூரில் அரச பொதுசேவைகளில் இடம்பெறும் குறைபாடுகள் தொடர்பாக 'குறைகேட்கும்' வகையில் நடமாடும் சேவை ஒன்று நடாத்தப்படுகின்றது அதன் மூலம் பொதுமக்கள் அரச நிர்வாக குறைபாடுகளை புகார் மூலம் தெரியப்படுத்துவதன் மூலம் அரச நிறுவனங்களை சீராக இயங்கச் செய்ய முடியும்.

தற்போதய நிலையில் மீளாய்வு மேற்கொள்ளப்படாமலேயே கிடைக்கப்பெற்றுள்ள தகவல்கள் திருப்திகரமானதாக அமைந்துள்ளன.

அரசியல் நிர்வாக பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அழுத்தம் கொடுப்பதாக இவ்வறிக்கை கூறுகின்றது. இத்திட்டத்தால் பயனடைந்த செல்வந்தர்கள் சிறந்த நிர்வாகத்திற்கு ஆதரவாக அழுத்தம் கொடுக்கின்றனர். தெற்காசிய நாடுகளின் அபிவிருத்தி தென் கிழக்கு ஆசிய நாடுகளின் அனுபவங்களை அடிப்படையாக கொண்டே செயற்படுத்தப்படுகின்றது என உலக வங்கியின் அறிக்கை தெரிவிக்கின்றது. தெற்காசியாவின் குறைந்த சேமிப்பும், முதலீடுகளும் மேலும் உட்கட்டமைப்பு நிதியின் பற்றாக்குறையும், உற்பத்திக்குறைவும் பொருளாதார வளர்ச்சிக்கு தடையான காரணிகளாக அமைந்துள்ளன.

தெற்காசியவிலுள்ள எல்லா நாடுகளிலும் உட்கட்டமைப்பு நிதியின் பற்றாக்குறை, குறைந்த முதலீடுகள் என்பன காணப்படுகின்றன. உதாரணமாக தற்போது சீனாவில் சராசரி ஒருவருக்கு உட்கட்டமைப்பு நிதியில் இன்றிருக்கும் பங்களிப்பை நிலையை அடைவதற்கு இந்தியா 12.5% பொருளாதார வளர்ச்சியை எதிர்வரும் 2015ம் ஆண்டுக்குள் அடைய வேண்டும்.

தெற்காசிய நாடுகள் இச்சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்தாவிட்டால் பொருளாதார வளர்ச்சியை தக்கவைக்க முடியாதென்று திரு.தேவராஜன் கூறினார்.

சமத்துவமின்மை, குறைந்த தனிமனித அபிவிருத்தி ஆகியன அரச நிர்வாகத்தில் குறைப்பாட்டையும், முரண்பாடுகளையும் ஏற்படுத்தும். இன்றிலிருந்து 20 ஆண்டுகளுக்கு பின் இப்பிரதேசத்தில் 400 மில்லியனுக்கு அதிகமானோர் மிகுந்த ஏழ்மை நிலையில் வாழ்வார்கள்.

தெற்காசியாவில் பொருளாதரத்துடன் ஒப்பிடுகையில், சமத்துமற்ற நிலை அதிகூடிய இடத்தை வகிக்கின்றது. உதாரணமாக இந்தியாவின் வளமுள்ள தெற்குபிரதேசங்கள் வடஇந்தியாவின் வளமற்ற பிரதேசங்களை விட 3% மேலதிக வளர்ச்சியை காணுகின்றது. உலகிலேயே இப்பிரதேசம் குறைந்த வசதிகளை உடையது உதாரணமாக 2002ம் ஆண்டின் 6% வளர்ச்சிப்பெற்றாலும் 5 வயதை அடைய முன்னர் 10 குழந்தைகள் இறந்துவிடுகின்றனர்.

மேலும், தெற்காசியவில் உள்ள 71 மில்லியன் மக்கள் பல்வேறுபட்ட உள்நாட்டு முரண்பாடுகளுக்கு முகம் கொடுக்கிறார்கள். தெற்காசியாவில் அதிக நாடுகள் ஊழல் போன்ற முறையற்ற செயற்பாடுகளும் அதிகமாக காணப்படுகின்றன. Transparence International பட்டியலின்படி பங்களாதேஷ் கடந்த 5 வருடமாக கடைசி இடத்தை வகிக்கிறது. எதிர்மாறான அரசியல் கொள்கைகள் பங்களாதேஷ், இலங்கை, இந்தியாவில் சில மாநிலங்களிலும் பெரும் தாக்கத்துக்குள்ளாக்கியுள்ளது. மேற்கூறிய சவால்கள் பாரியளவாயிலும் தெற்காசிய நாடுகள் இவற்றை முறியடிக்க ஒரு அரிய சந்தர்ப்பத்தை பெற்றுள்ளன.

இவ்வறிக்கை தெற்காசியா நாடுகளின் அரசியல் கொள்கைகளின் மூலம் தொழில் வளர்ச்சி, சுகாதார வளர்ச்சி, கல்வி உட்கட்டமைப்பு ஆகியவற்றின் வளங்களை வசதியற்றவர்களுக்கு பகிர்ந்தளிப்பதன் மூலம் வறிய மக்களின் வாழ்க்கையை வளப்படுத்த முடியும்.

#####

மேலதிக தகவல்களுக்கு உலக வங்கியின் தெற்காசிய நாடுகள் http://www.worldbank.org/sar